# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2090/38 - 2018 සැප්තැම්බර් මස 28 වැනි සිකුරාදා - 2018.09.28

*2090/38 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 28 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (I) - பொது

### *அரசாங்க அறிவித்தல்கள்*

**1988 ஆம் ஆண்டின் 83 ஆம் இலக்க சுங்கக் கட்டளைச் சட்டம்**

சுங்க (திருத்த) கட்டளைச் சட்டத்தின் (235 ஆம் அதிகாரம்) 103 பீ (1) ஆம் பிரிவின் கீழ் எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், மங்கள சமரவீர ஆகிய என்னால், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் என்ற வகையில் கொள்கலன் சுமைகளுக்குக் குறைவான பொருட்களுக்காக உள்நாட்டில் அகற்றுவதற்கான நிலையமொன்றைத் தாபிப்பதனை நோக்காகக் கொண்டு இதன் மூலம் கட்டளை இடப்படுகின்றது. இந்தக் கட்டளை 2018, ஒற்றோபர் 01 ஆந் திகதியிலிருந்து செயல்வலுப்பெறும்.

மங்கள சமரவீர,
நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்.

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு,
கொழும்பு 01,
2018, செத்தெம்பர் 28.

கட்டளைகள்

1. கொள்கலன் சுமைகளுக்குக் குறைவான பொருட்களுக்காக உள்நாட்டில் அகற்றுவதற்கான நிலையமொன்றைத் தாபித்தல்.

2. இந்தக் கட்டளைகளின் நோக்கம் அதிகரித்துள்ள சர்வதேச வர்த்தக உட்பாய்ச்சல்களுக்கான வசதிகளை வழங்குதல் மற்றும் கொழும்புத் துறைமுகத்திலுள்ள நெருக்கடிகளைக் குறைப்பதற்கான வசதிகளை வழங்குதல் மற்றும் கொள்கலன் சுமைகளிலும் பார்க்கக் குறைவான பொருட்கள் (இதனகத்துப் பின்னர் LCL எனக் குறிப்பிடப்படுகின்ற) பற்றி பன்நாட்டு ஒருங்கிணைத்தல் உட்பட இறக்குமதி, ஏற்றுமதி மற்றும் மீண்டும் கப்பலேற்றுதல் சம்பந்தமாக நடவடிக்கை எடுப்பதற்கு நாட்டினுள் அகற்றல் நிலையமொன்றை (இதனகத்துப் பின்னர் ICD எனக் குறிப்பிடப்படுகின்ற) தாப்பிப்பதன் மூலம் இலங்கையினுள் கொள்கலன் சுமைகளிலும் பார்க்கக் குறைவான பொருட்களை அகற்றல் செயற்பாட்டுக்காக இடமளித்தலாகும்.

3. ICD தாபிப்பதற்கு சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 103 ஏ பிரிவுக்கு இணங்கியதாக இலங்கைச் சுங்கத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அவர்களின் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டிய அதேவேளையில், செயற்பாட்டிற்கான அறிவுரைகள் மற்றும் வழிகாட்டல்கள், சுங்கக் கட்டளைச் சட்டத்திற்கு இணங்கியதாக சுங்கப் பணிப்பாளர் நாயகம் அவர்களினால் வெளியிடப்படுதல் வேண்டும்.

4. கௌரவ நிதி அமைச்சர் அவர்களினால் மேற்கூறப்பட்ட ICD இற்கு அனுமதி வழங்கவேண்டிய அதேவேளையில், இலங்கைச் சுங்கத் திணைக்களத்தினால் வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படுதல் வேண்டும்.

5. ICD இனைத் தாபிப்பதற்காக பின்வரும் தகைமை தகுதிறன்கள் பூர்த்தி செய்யப்படுதல் வேண்டும்.

5.1 ICD வசதிகள் முகாமைத்துவத்திற்காக வசதிகளிலுள்ள பொருளாதார சாத்தியவளம் மற்றும் பயன்படுத்துநர்களுக்கான கவர்ச்சி ஆகியவற்றினைக் கொண்டிருத்தல் வேண்டும். சுங்கப் பணிப்பாளர் நாயகம் அவர்களைத் திருப்திப்படுத்துவதனை நிரூபிப்பதற்கு மாதாந்தம் (இரு வழி) வியாபாரத்திற்கு இருபது அடிகளுக்குச் சமனான அலகுகளைக் கொண்ட பொருட்களைக் கொண்டு செல்லும் வசதிகளை வழங்கும் ஆற்றல்களைக் கவனத்திற் கொள்ளும்போது வாய்ப்பு வளமுள்ள தொழில் முயற்சியாளர்கள் இணங்குதல் வேண்டும்.

5.2 குறைந்தபட்ச முதலீடு ரூபா 500 மில்லியன் தொகையாக இருத்தல் வேண்டும்.

5.3 தேவையான காணிகள்.- ICD இனைத் தாபிப்பதற்கு தேவையான குறைந்தபட்ச இடப்பரப்பு காணி மற்றும் களஞ்சியசாலை உட்பட 125,000 சதுர அடிகள் ஆகும்.

5.4 ICD இனை வடிவமைத்தலும் தயாரித்தலும் :

(அ) வடிவமைத்தலும் மற்றும் தயாரித்தலும் என்பன சர்வதேச தரங்களைக் கொண்ட இயந்திர/இலத்திரனியல் வசதிகளைக் கொண்ட அதி நவீன தொழில்நுட்பங்களைக் கொண்டதாக இருத்தல் வேண்டும். ICD யின் ஊடாக கொள்கலன், சரக்குப் பொருட்கள் மற்றும் வாகனங்களை தடையின்றி வெளிச் செல்வதற்கு சிறந்த திட்டமொன்றைத் தயாரிப்பதற்கான பிரதான காரணியாகும். திட்டத்தைத் தயாரிக்கும்போது வியாபாரத்தின் அடிப்படை அளவு, அடுத்த பத்து ஆண்டுகளில் மதிப்பீட்டின் அளவு மற்றும் ஏற்றுமதியாளர்களுக்குத் தேவையாக இருக்கக்கூடிய வசதிகள் போன்றவை பற்றி கவனத்திற்கொள்ளுதல் வேண்டும். இந்தத் திட்டமானது, இடைத்தொடர்பு வீதி (புகையிரதப் பாதை), கொள்கலன் தொகுதி, பாதுகாப்புக் கூடம் மற்றும் பாதுகாப்புப் பிரிவு, எல்லை மதிற் சுவர் (வேலிகள்) வீதி, நடைபாதை, அலுவலகக் கட்டடம் மற்றும் பொது வசதிகள் போன்ற இலட்சணங்களைக் கொண்டிருத்தல் வேண்டும். வீதிகளின் நீளம் மற்றும் வீதியின் அளவு புகையிரதத்தைப் பயன்படுத்துவதற்கும் தேவையான போது நிறுத்தி வைப்பதற்கும் போதுமானளவு இருத்தல் வேண்டும்.

(ஆ) அதனைச் சூழவுள்ள வேலிகள் மற்றும் ஒளியூட்டல் சுங்க அதிகாரிகளினால் வேண்டப்படுகின்ற தரங்களைக் கொண்டிருத்தல் வேண்டும். வளவின் பாதுகாப்பிற்கான முன்னணி இலட்சணமாக உட்செல்கின்ற இடம் (நுழை வாயில்) செிறந்த முறையில் திட்டமிடுதல் வேண்டும்.

(இ) கப்பற் சரக்கு மற்றும் கொள்கலனுடன் சம்பந்தப்பட்ட சகல ஆவணங்கள் சம்பந்தமாகவும் நடவடிக்கையை மேற்கொள்கின்ற பிரதான இடம் நிருவாகக் கட்டடமாகக் காணப்படுகின்ற அதேவேளையில், அந்த இடத்தில் சேவையாற்றுகின்ற ஊழியர்களின் எண்ணிக்கைக்கு அமைவாக அதன் அளவு தீர்மானிக்கப்படும். துப்பரவேற்பாட்டு வசதிகள் மற்றும் முடியுமான விதத்தில் உணவு வழங்கல் வசதிகளுக்காக நிலையான ஏற்பாடுகளைச் செய்தல் வேண்டும்.

(ஈ) களஞ்சியம் மற்றும் சகல நுழைவு மற்றும் வெளியேற்ற இடங்கள் உட்பட முழுமையான வளவுக்கும் மூடிய சுற்றோட்ட தொலைக்காட்சித் தொகுதி (CCTV) தாவிக்க வேண்டிய அதேவேளையில், அதனை இலங்கைச் சுங்கத் தலைமையகத்துடன் தொடர்புபடுத்துதல் வேண்டும்.

(உ) சுங்கப் பணிப்பாளர் நாயகம்/சுங்கப் பணிப்பாளர் (கைத்தொழில் மற்றும் சேவைப் பிரிவு) அவர்களினால் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற, ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தரங்களுக்கமைவாக சிறந்த முறையில் பதிவுசெய்து வைப்பதற்கான தொகுதியொன்று இருத்தல் வேண்டும்.

(ஊ) வெவ்வேறாக அமைந்துள்ள நுழைவு மற்றும் வெளியேறல் வீதியைக் கொண்டதாக நுழைவாயிற் தொகுதி.

(எ) வளவுக்குள் நுழைவதற்கு காத்திருக்கின்ற வாகனங்களுக்காக தேவையான அளவு நிறுத்தி வைக்கும் இடவசதிகள்.

(ஏ) சுங்கத்தினால் விசேடமாகக் காட்டப்பட்ட தரங்களுக்கு அமைவாக எல்லை மதிற் சுவர்.

(ஐ) இலங்கைச் சுங்கத் திணைக்களத்தில் ASYCUDA கணினித் தொகுதிக்கு இணைப்பதற்குப் பொருத்தமான கணினிமயப்படுத்தப்பட்ட ஆவணங்களைத் தயாரிக்கும் தொகுதி.

(ஒ) இலங்கைச் சுங்கத் திணைக்களத்தினால்/நிதி அமைச்சினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கணிணிமயப்படுத்தப்பட்ட கப்பற் சரக்கு கையிருப்புப் பொருட் பதிவேட்டுக் கட்டுப்பாட்டுத் தொகுதி.

5.5 ICD இற்காக உபகரணங்களைத் தாபித்தல்.-

ICD இற்குப் பொருட்களை ஏற்றுதல், பொருட்களை இறக்குதல், குறைத்தல், அங்குமிங்கும் கொண்டு செல்லுதல், பொருட் கையிருப்பை அகற்றுதல், பொருட்களை நிரப்புதல், வெறுமையாக்குதல் ஆகியவற்றுக்காக நவீன பொருள் கையாளுகை உபகரணங்களைத் தெரிவுசெய்தல் வேண்டும்.

5.6 ICD இன் அமைவிடம்.-

பயன்படுத்துநர்களுக்காக வாரத்தின் ஏழு நாட்களிலும் 24 மணித்தியாலங்கள் முழுவதும் பொருட் கையிருப்பை அங்குமிங்கும் கொண்டு செல்வதற்கும் அகற்றுவதற்கும் வசதிகளை வழங்குவதற்காக ICD சர்வதேச துறைமுகம் ஒன்றிலிருந்து அல்லது விமான நிலையமொன்றிலிருந்து நியாயமான தூரத்தில் அமைந்திருக்க வேண்டிய அதேவேளையில், துறைமுகத்திலிருந்து ICD வரையான நுழைவுப் பாதை கனரக கொள்கலன்கள் பயணிப்பதற்குப் பொருத்தமானதாக இருத்தல் வேண்டும். மொத்த போக்குவரத்துச் செலவிலுள்ள கழிவு ICD இன் அமைவிடத்திற்கான ஆரம்பத் தகுதிறனாகும்.

5.7 விண்ணப்பப்படிவங்களைத் தயார் செய்வதற்கான கட்டணம்.-

ரூபா 1,00,000 விண்ணப்பப்படிவம் தயாரிப்பதற்கான கட்டணமொன்றைத் தயாரித்தல் வேண்டும். இதனை இலங்கை அரசாங்கத்தின் திரண்ட நிதியத்துக்கு வரவு வைக்க வேண்டும்.

5.8 ICD இற்கான வருடாந்த அனுமதிப்பத்திரக் கட்டணம்.-

ரூபா 5,00,000 விண்ணப்பப்படிவம் தயாரிப்பதற்கான அனுமதிப்பத்திரக் கட்டணம். இதனை இலங்கை அரசாங்கத்தின் திரண்ட நிதியத்துக்கு வரவு வைக்க வேண்டும்.

12-165

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.